**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : S.T.C586-2021.**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 28.07.2023**

| | |
|---|---|
| **Name : நாகலட்சுமி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஜலகண்டபுரத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது தந்தையாருக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் மண்ணை கொட்டிஇருந்தார். எதிரிக்கும் எனது தகப்பனாருக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. இது சம்மந்தமாக மேட்டூர் நீதிமன்றத்தில் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது. கடந்த 17.12.2019-ம் தேதி மாலை 3.30 மணியளவில் பிரச்சனை உள்ள இடத்தில் எனது தந்தையார் டிராக்டரில் மண் கொண்டு வந்து கொட்டினார்.

2) எதிரி ராஜு அதனை தட்டிக்கேட்டு டிராக்டர் சாவியை எடுத்து வைத்துக்கொண்டார். தகவல் அறிந்தநான் சம்பவயிடம் சென்றபோது, இது பற்றி கேட்டபோது, எதிரி என்னை கெட்டவார்தையால் தேவடியா, கண்டார ஓலி என்று திட்டி, எனது வலது கன்னத்தில் கையால் அடித்து காயம் ஏற்படுத்தினார். பிறகு எனது வயிற்றுபகுதியில் கையால் குத்தினார். சம்பவம் குறித்து அறிந்த எனது கணவர் என்னை ஜலகண்டாபுரம் அரசு மருத்துவனைக்கு சென்று சிகிச்சைகாக சேர்ந்தேன்.

3) காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். ஆஜர் எதிரி தான் என்னை அடித்தவர் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

எதிரி வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

ஒம்/– தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.